

ரூ. 2/-
லயன் காமிக்ஸ்
இரட்டை வேட்டையர்
தோன்றும்
ஆப்பிரிக்க சதி!


விரைவில் வெளிவருகிறது!
பாக்கெட் சைஸ்!
மாஸ்கோவில் மாஸ்டர்
ரூ. 2·50
லயன் காமிக்ஸ்

அன்பார்ந்த வாசகர்களே!

ஐரோப்பப் பயணத்தை முடித்துக்கொண்டு 3-11-85 தேதியன்று சென்னை திரும்பி வந்தேன். எனது முயற்சிக்கு வாழ்த்துக்களும், நல்லாசிகளும் தெரிவித்த வாசக-விற்பனையாள நண்பர்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி! நன்றி!

பயணக் கதைகளெல்லாம் எழுதி உங்களை போரடிக்கப்போவதில்லை நான். பதிலாக புத்தம் புதிய பல ஹீரோக்களை அறிமுகம் செய்து வைத்து உங்களை திகைப்பில் ஆழ்த்தப் போகிறேன்!

நமது "லயன் காமிக்ஸ்"ல் ஏற்கனவே ஹீரோக்கள் நிறையப் பேர் இருப்பதால், "திகில்" என்ற புதியதொரு காமிக்ஸ் மூலம் புதிய ஹீரோக்களில் பலர் அறிமுகமாவார்கள்!

"திகில்" காமிக்ஸ் 1986 ஜனவரி 15 முதல் மாதம் ஒரு முறை வெளிவரயிருக்கிறது. விலை ரூ. 3/-

நமது "லயன் காமிக்ஸ்" மீது நீங்கள் காட்டிவரும் அக்கறையிலும், ஆதரவிலும் ஒரு சிறிய பங்கினை புதிய இதழான "திகில்" மீது காட்டினால் கூட, அது மாபெரும் வெற்றியாக அமைந்து விடும் என்பது உறுதி! உங்களது அன்பான ஒத்துழைப்பை "திகில்" காமிக்ஸ்க்கும் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

புதிய ஹீரோக்கள் பற்றிய விபரம் 110-ம் பக்கம் உள்ளது.

வணக்கம்.

உங்கள் அன்புள்ள,
S. விஜயன்,
(ஆசிரியர்)




மற்றும் ஒரு குட் நியூஸ் - உங்கள் அபிமான லயன் காமிக்ஸ்' விரைவில் மாதமிருமுறையாக வெளிவரயிருக்கிறது! அறிவிப்பை எதிர்பாருங்கள்!

# இரட்டை வேட்டையர் தோன்றும்
# ஆப்பிரிக்க சதி!







நாடெங்கும் இளைஞர்கள் உற்சாகத்தில் துள்ளிக்கொண்டிருந்தனர்...
வவ்! பயங்கரமாய் ஸ்டண்ட் போடு-கிறார்களே!
இரண்டு ஹீரோக்களும் லேசுப் பட்டவர்களல்ல!
நிகழ்ச்சியின் உச்சக் கட்டம்—
பொறுக்கிகளா! உங்களை சுட்டுப் பொசுக்கட்டுமா அல்லது மலை முகட்டிலிருந்து உருட்டி விடவா?


ஹீய்…
உனக்கெதற்கு சிரமம்?
டேய்…சல்லடையாகத் துளைக்கப் போகிறேன் பார்!
உனக்கு ஒரு பழமொழி சொல்லட்டுமா அப்பனே?
"முந்துபவனுக்கு வெற்றி!" என்பதே அது!
அஆ...!


ஆள் பறந்து விட்டார்கள் இருவரும்!
என்னமாய் சாகஸம் செய்கிறார்கள்!
வெகு விரைவில்...
TV Chart Ratings
1. The Hunters
2. Royal Street
3. Game for a Grin
4. News at Nine
ஒரு வாரத்திற்குள் வேட்டையர்கள் மிகவும் பிரசித்தி பெற்று விட்டார்கள்!
TV STUDIOS


ஜார்ஜ்... நம் ரசிகர்களைப் பார்த்தாயா?
கொஞ்சம் தாமதித்திருந்தால் கூட நம்மை நகர விட்டிருக்க மாட்டார்கள்!
அப்பொழுது—
குட் மார்னிங்!
யார்... தலைவரா?
ஆமாம்... நீங்கள் இப்பொழுது தேர்ந்த டி.வி. நடிகர்களாகி விட்டீர்கள்! S 14 உளவுப் பிரிவின் பணிகளை இரகசியமாக செயல்படுத்த அருமையான வெளிவேஷம் இது! வெஸ்ட்கேட்டில் முக்கியமான அணு ஆராய்ச்சி செய்துவரும் புரபஸர் சார்ல்டனை பாதுகாக்க வேண்டியது உங்கள் முதல் பணி! ம்ம்... புறப்படுங்கள்!


வெஸ்ட் கேட்டிலுள்ள அரசு இரசாயன ஆராய்ச்சிக் கூடத்தில் பின்னிரவு வேளையிலும் தனிமையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார் புரபஸர் சார்ல்டன்.
என் புதிய கண்டுபிடிப்பினை பல வகையான சோதனைகளுக்கும் உட்படுத்திப் பார்த்து விட்டேன். அதன் செயல்திறன் நூற்றுக்கு நூறு நம்பகமானது! என்னுடைய இந்த அரிய கண்டுபிடிப்பு உலக அமைதியை பராமரிக்க பெரிதும் உதவக் கூடும் என்பதில் ஐயமில்லை!
தன்னுடைய பணியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த புரபஸர் ஆராய்ச்சிக் கூடத்தின் கதவு மெல்ல திறந்து கொண்டபோது எழுந்த ஓசையினை கேட்கத் தவறிவிட்டார்.


அந்தக் கார் ஃபைலை இப்படிக் கொடு!
யா...யார்...நீ? கொடுக்க மாட்டேன்!
சரி, நானே எடுத்துக் கொள்கிறேன்!
ஆஆஆ...
இனி வந்த வழியாகவே பூனை போல் மெள்ள நழுவி விட வேண்டும்.


ஆனால்-அங்கே திடுமென
பிரவேசம் செய்தனர்
வேட்டையர்!
உன்னை நாங்கள் வெகு நேரமாகவே பின் தொடர்ந்து வருகிறோம்! நீ செய்த கொடிய கொலையை தடுக்க முடியாமல் போய் விட்டது!
நா... நான்—
இன்னும் என்ன யோசனை...? தப்பிக்க வழியே கிடையாது என்பது புரியவில்லையா?
அடக்கடவுளே... ஜன்னல் வழியாக வெளியே பாய்ந்து விட்டானே!
டமா!
ஆ... அம்...


ஆ ஆ ஆ...
அது-நிகோடோ! திட்
டத்தில் ஏதோ குளறுபடி
நேரிட்டிருக்கக் கூடும்...
வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்
டிருக்க வேண்டும்! தோல்வியை விட
மரணத்தை நேசிப்பவன் நிகோடோ!
அவர்கள் கிளம்பிச் செல்
கிறார்கள்... டிரேக்!
தடுத்து நிறுத்த முடியுமென்று
தோன்றவில்லை... ஏதேனும் ஒரு
தோட்டா கார் சக்கரத்தை
துளைத்தால்தான் உண்டு...


மேற்கொண்டு நம் நடவடிக்கை என்ன என்பதை தலைவர்தான் தீர்மானிக்க வேண்டும்.
நாங்கள் எஸ். ஐ. சிக்ஸை சேர்ந்தவர்கள் இதோ... அடையாள அட்டை! இந்த கொலை சம்பந்தப்பட்ட பிரச்னையை பாதுகாப்பு படைப் பிரிவின் பொறுப்பில் விட்டுச் செல்கிறோம்!


பிரிட்டிஷ் உளவுத் துறையின் விசேட பிரிவான எஸ். ஐ. -6 ன் தலைவர் கர்னல் யை சென்று சந்தித்தனர்.
அணுக்கதிரியக்கத்தின் புதிய கண்டுபிடிப்புஉலகஅமைதிக்கு பெரிதும் உதவக் கூடும் என்பது புரபஸரின் நம்பிக்கை.
ஏதாவது ஒரு நாட்டின் கையில் சிக்கினால் அந்த நாடு ஒரு நியூக்ளியர் போரை துவக்கி அதில் வெற்றியும் கண்டுவிடும் அபாயம் உண்டல்லவா!
13


டிரேக், நீ குறிப்பிடும் அப்படியொரு அதிபயங்கர சூழ்நிலைதான் இப்போது உருவாகிவிட்டிருக்கிறது! ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு சின்னஞ்சிறு நாடான ஜானுவை கொடுங்கோலாட்சி செய்து வரும் அரசன் பீட்டோ வசம் போய்ச் சேர்ந்திருக்கிறது அந்த ஃபார்முலா!
தன் பிரஜைகள் நூற்றுக் கணக்கானோரை கொன்றும், வெஞ்சிறையில் போட்டு வதைத்தவனாயிற்றே அந்த பீட்டோ...
டி.வி.யில் தி வேட்டையர்கள் என்ற தொடரில் பங்கேற்கும் நடிகர்களாகத்தான் உங்களை உலகம் அறிந்து வைத்திருக்கிறது! விளம்பர நோக்கோடு நீங்கள் ஜானு செல்வதாக ஒரு பயணத்தை ஏற்பாடு செய்கிறேன்!
சில தினங்களுக்குப் பின்- ஒரு பிரத்யேக விமான நிலையத்தில்...
AIRWAYS
பிரிட்டிஷ் டி.வி நடிகர்கள் தன் நாட்டுக்கு வரும் திட்டத்தை பெரிதும் விரும்பி வரவேற்ற பீட்டோ உங்களை அழைத்துச் செல்ல தன் சொந்த ஜெட் விமானத்தையே அனுப்பி வைத்திருக்கிறான்!


வருக...வருக...! உள்ளே வந்து அமருங்கள்! எங்களுடைய ஏரோ குதிகச்சான் - ஜானுவில் உங்கள் அனுபவம் மிக மிக இனிமையானதாக இருக்க வேண்டும் என்பதே!
நன்றி...!
விமானம் கிளம்பியது—
KARA AIRWAYS
தாகத்துக்கு ஏதாவது பருக விரும்புகிறீர்களா ஸார்? ஷாம்பெயின் தேவியர்...
வேண்டாம் என்று சொல்லப் போகிறோம் - கொண்டு வாருங்கள்!
தெற்கு நோக்கி பல மைல்தூரம் பயணம் செய்தபின்—
விருந்து பிரமாதம்— உபசரிப்பு அதற்குமேல்!
உண்ட மயக்கம்...எனக்கு தூக்கம் வருகிறது. பணியாளரை அழைத்து போர்வை ஒன்று கேட்கப் போகிறேன்!


நேரம் போய்க் கொண்டேயிருக் கிறது... அழைப்புக்கு பதிலே யில்லை. யாரும் வரக் காணோமே!


திடீரென்று—
யாரிங்கு... நானனனை...!
சைத்தானின் தூதுவன் நான்!


உங்களில் முதலில் யாரைப்பலி கொள்வது நான் — நீங்களே சொல்லுங்கள்...!
ஹே . இது என்ன நிஜமதானா- அல்லது மனப்பிரமையா?


நீங்கள் சொல்லாவிட்டால் அதை இந்த ஈட்டி தீர்மா னிக்கட்டும்...!
ஆபத்து...!
விலகிக் கொண்டு விடு டிரேக்!
என்ன இதெல்லாம்?
சைத்தானின் தூதுவன் உன் கேள்விக்கு பதில் சொல்லும் நிலையில் இல்லை ஜார்ஜ்!


அம்மாடி... நல்லவேளை இலக்கு நாம் அல்ல!
ஹாஹ்...ஹ்!
ஒரே அடியில் மேஜையை நொறுக்கி அந்த கதாயுதத்தால் தான் என்ன சாதிக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டி விட்டான்...அவனுடைய அடுத்த இலக்கு நாம்தானா என்று தோன்றுகிறது!
இந்த ஆயுதம் உங்களின் தலைவிதியை நிர்ணயிக்கும்!
ஆ...வ்!
குனிந்து கொள் என்று நீ என்னை எச்சரிக்கத் தேவையில்லை டிரேக்!


இதோ...ஆசாமி நம்மிடம் வகையாக சிக்கிக்கொண்டு விட்டான்!
சரியான முரடன் என்று தோன்றுகிறது!
ஊய்ய்...ய்ய்!
ஆஆஆ...!
ஆவ்...எத்தனை பலம்!
வேடிக்கை விளையாட்டு எல்லைமீறி போய்க் கொண்டிருக்கிறது...
நிறுத்து உன் வெறியாட்டத்தை! இல்லையேல்!


முகமூடியை அகற்றி நான் யாரென்று காட்டிக் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது!
அரசர் பீட்டர்!
என்ன விளையாட்டு இதெல்லாம்! ஏறத்தாழ எங்களை நீங்கள் கொன்றுவிட்ட மாதிரி நடந்துவிட்டதே!
சே...சே...அப்படியெல்லாம் இல்லை நண்பர்களே! நீங்கள் டி.வி.யில் ஸ்டண்ட் வேலையெல்லாம் செய்கிறீர்களல்லவா...சும்மா ஒரு தமாஷ் அவ்வளவுதான்!
ஹூம்...நானும் டிசேக்கும் உயிரோடு ஊர் திரும்ப மாட்டோம்!


ஜானுவுக்கு வர எங்களுக்கு கிடைத்தவாய்ப்பை பெரும் கௌரவமாக கருதுகிறோம் மன்னரே!
இல்லை பெருமை எங்களுக்குத் தான்! எனது நாடு மிக சிறி-யது.-ஏழ்மையானது! ஆனால் என் பிரஜைகள் மிக மிக மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள்!
சிலமணி நேரத்திற்குப் பின் ஜெட் விமானம் ஜானுவை வந்தடைந்தது.
ZANA
டாங்கிகளும்...படைவீரர்களின் கூட்டமும், கடுத்தமான பாது காப்பு ஏற்பாடுகள்தான்...நம் பணி சிரமமானதாகத்தானிருக்கப் போகிறது டிரேக்!
இருக்கட்டுமே - அதற்காக முன் வைத்த காலை பின் வைக்கப் போகிறோமா என்ன?
ஆக , என் பயண திட்டப்படி பார்த்தால் விமானம் இரண்டு நிமிடம் தாமதமாக தரை யிறங்கியிருக்கிறது!


அந்த ராக்கெட் ஏவுகணையை இப்படி கொடடா முண்டம்!
விமானியும் சக பணியாளர்களும் என் உத்தரவுப்படி நடந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்... இனியும் என்னிடம் பணியாற்ற தகுதியில்லை அவர்களுக்கு!
இது முறையற்ற செயல்...
மரணம்தான் அவர்களுக்கு சரியான தண்டனையாக இருக்கும்!


படுமோசமான
வெறிச்செயல்
இது! உங்களுக்
கென்ன பைத்
தியம் பிடித்து
விட்டதா?
என் பிரஜைகளுக்கு முன்னிலையில்
என்னை இகழ்ச்சியாக நீ பேசி
யதையும் என்னால் பொறுத்துக்
கொள்ள முடியாது...உன்னை—


சரியான கிறுக்கனாக
இருப்பான் போலிருக்
கிறதே!


ஹா...ஆஆ!
ஆ...செத்தேன்!


இது கொஞ்சம்கூட நன்றாக இல்லை...ஏதோ குறி கொஞ்சம் தவறிவிட்டதால் உயிர் பிழைத் தோம் - இல்லாவிடில்...
கோபித்துக் கொள்ளாதீர்கள் என் படைவீரர் களுக்கு முன். நான் கடுமையானவன் என்று காட்டிக்கொள்ளவே உங்கள் மீது சினம்கொண் டவன் போல் நாடகமாடினேன்...வேண்டு மென்றே குறி தவறி சுட்டேன்!
பயங்கரமான ஆசாமி தான்...இரண்டு நிமிடம் தாமதமாக வந்து இறங்கிய சிறு தவறுக்கு விமானத்தை சிப்பந்திகளோடு தகர்த்து விட்டான்! எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!
தலைநகரின் பிரதான சாலை களின் வழியே அரசரின் கார் சென்றபோது-
மன்னர் பீட்டோ நீடுழி வாழ்க!
மாமன்னர்... வாழ்க!
அடேயப்பா...! பீட்டோ கொடுங் கோலன் என்ற போதிலும் அவ னுடைய மக்கள் என்னமாய் இவனை துதிபாடுகிறார்கள்!


ஆமாம்...எனதருமை மகா ஜனங்களே! உங்கள் அரசர் கருணையுள்ளம் கொண்டவர் தான்...அவர் உங்களை காப்பாற்றுவார். பீட்டோவின் ஆணைக்கு பணியும் அனைவருக்கும் பாதுகாப்பு உண்டு!
இதோ...அரசரின் கருணை மழை கரன்சியாக நம் மீது பொழிகிறது!
மக்கள் இவனை நேசிப்பதன் காரணம் இப்போது புரிகிறது!
ஏழை மக்கள்...பணத்தை வாரியிறைத்து அவர்களின் ஆதரவை பெறுவது சுலபம்.
அப்போது -
அதோ...என் அரண்மனை! பிரமாதமாக இருக்கிறதல்லவா?
ஆமாம்... அரசே...!
ஏதோ கோட்டைமாதிரியல்லவா கட்டிக் கொண்டிருக்கிறான். நானும், ஜார்ஜும் தேடி வந்திருக்கும் ஃபார்முலா இந்தக் கட்டிடத்தில்தான் எங்கோ இருக்கக் கூடும்!


பிட்டோ மாதிரி ஒரு அரைக்கிறுக்கன் நியூக்ளியர் போரை தொடங்க கொஞ்சமும் தயங்கமாட்டான்.
'தி ஹண்டர்ஸ்' நிகழ்ச்சியில் நடிக்கும் புகழ் பெற்ற நடிகர்கள் இங்கே தங்க வந்திருப்பதில் பெருமையடைகிறேன். உங்களுடைய பெயர் விளம்பர பிரச்சாரத்திற்கு ஏற்கனவே விசித்திரமானதொரு திட்டம் தயார் செய்து வைத்திருக்கிறேன்
மேலும்—
ஆ...அங்கே...
கொரில்லா...!
நம்மை நோக்கித்தான் வருகிறது!


க்க்ர்ர்ர்ர்!
அரசர் மீது பாய்கிறது!
ஆனால்...
இது...இது...உங்களுடைய செல்லப் பிராணியா!
சமர்த்துடா குஜூரா கண்ணு! மாஸ்டரை எப்போதுமே இப்படி கட்டிபிடித்து வரவேற்கத்தான் பிடிக்கும் உனக்கு. இரு ..உனக்கு வாழைப்பழம் வரவழைக்கிறேன்!
என் மெய்க்காப்பாளனும் கூட! எனக்கு யாராவது ஊறு செய்தால் உடனே அவர்களை கொன்றுபோட கொஞ்சமும் தயங்க மாட்டான்!
இந்த குஜூராவிடம் எச்சரிக்கையோடு நடந்துகொள்வது தான் அவசியம்!


சில நிமிடங்களுக்குப் பின்.
பயங்கர சூழலில் வந்து மாட்டிக் கொண்டு விட்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது டிரேக்! ஃபார்முலாவை கண்டுபிடித்து எடுத்துக் கொண்டு எத்தனை சீக்கிரமாக இங்கிருந்து ஓடிப் போகிறோமோ அத்தனைக்கத்தனை நல்லது!
உஷ்...ஷ்!
டிரேக் அறை முழுவதும் சோதனை போட்டான்...
ஃபார்முலா இந்த கட்டிடத்தில் தான் எங்கோ இருக்க வேண்டும் என்று நம்ப முடிகிறது! வா போய்ப்பார்க்கலாம்.
இதோ...நான் எதிர்பார்த்த மாதிரி ஒட்டுக் கேட்க பயன் படும் கருவி பூ ஜாடிக்குள்ளே இருக்கிறது! இனி நாம் கிசுகிசு குரலில் பேசிக் கொள்வோம்!
வராந்தா வழியே பூனை போல் பதுங்கி நடந்தார்கள்...
இப்படி! இந்த கதவை தள்ளிக் கொண்டு போய் விடலாம்!




PRESIDENT'S LIFT
NO USE BY UNAUTHORISED
இதோ...லிப்ட் ஒன்று! 'அரசின் பிரத்யோக உபயோகத்திற்கு' என்று போட்டிருக்கிறது...
சுவாரஸ்யமான விஷயம் தான்! வா...பயன்படுத்தி பார்த்துவிடலாம் அதை!
கட்டுப்பாடு அமைப் பில் கடைசி பட்டன் குறிப்பிடப்படாமல் வெறுமனே இருப் பதைக் கவனி!
1
2
3
4
5
6
மறு கணம்-
ஆ...ஐயோ! லிப்ட் கட்டுப்பாடிழந்து கீழே பயங்கர வேகத் தில் விழுகிறதே!
தரையில் போய் விழுந்து நொறுங் கப் போகிறது - நாமும்தான்!


அவசரப்பட்டு மடத்தனமான காரியம் பண்ணிவிட்டோம்!
மற்ற பட்டன்களை அழுத்திப் பார்த்து விடலாம்... இந்த ஆபத்திலிருந்து உயிர் பிழைக்க ஏதேனும் வழி பிறக்கக் கூடும்!


ஊஹூம்... பயனில்லை! தொலைந்தோம்!


ஆஆ!
அட....லிப்ட் சட்டென்று நின்றுவிட்டதே! நாமும் இன்னமும் முழுதாக இருக்கிறோம் - வீணாக கலவரப் பட்டு விட்டோம்...
அங்கே பார்! வராந்தா முடிவில் ஒரு கதவு தென்படுகிறது பார்...எனக்கென்னவோ அங்கே போய் அதை திறந்து பார்க்க வேண்டும்!


அ...ம்மா... டியோவ்!
விஷயம்...எஸ்.ஐ-6...பயந்த மாதிரியேதானிருக்கிறது!
நியூக்ளியர் ஏவுகணை! அரண்மனை கட்டிடத்திற்கு அடியில் உள்ள இரகசிய ஆய்வு கூடத்தில் துரித மாக உருவாகிக் கொண்டு வருகிறது!
ஆக, பீட்டோ விரை விலேயே ஒரு அணு-யுத்தத்தை தொடங்கக கூடும்!



இம்மாதிரி பல ஏவுகணைகளை தயாரித்து வைத்துக்கொண்டால் அவன் எந்த ஒரு நாட்டையும் நினைத்த மாத்திரத்தில் தாக்க முடியும்... அவனிடம் அந்நாடுகள் அடிபணிந்து மண்டியிடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போகும்!
அவன் ஃபார்முலாவை பயன்படுத்து முன் அதை நாம் அப்புறப் படுத்தியாக வேண்டும்!
அப்போது...
யாரோ அந்நியர்கள்...
சண்டைபோட இது தருணமல்ல டிரேக்! சட்டென்று அந்த கதவை சாத்து...
ம்...வந்து...பாதை தவறி விட்டது... திரும்பிச் செல்ல வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்- கொஞ்சம் உதவி செய்யுங்கள்!
ஊடுருவல் செய்யும் விஷமிகளை - அவர்கள் யாராக இருந்தாலும் - கண்ணில் பார்த்த மாத்திரத்தில் சுடும்படி எங்களுக்கு உத்தரவு!


யா...யாரது?
ஆவ்...!


அரும் !
அரசரின் செல்லப் பிராணி - குஜுகா!
க்க்ர்ர்...க்ர்!


நண்பர்களே! இந்த மிகப்பிரம்மாண்டமான அரண்மனையில் நீங்கள் வழி தவறி விட்டதில் வியப்பேதுமில்லை... என் வீரர்களின் முரட்டுத்தனமான நடவடிக்கைகளுக்காக உங்களிடம் மன்னிப்புகோர விரும்புகிறேன்!



என்னுடைய பிரத்யேக 'லிப்ட்'டை நீங்கள் உபயோகித்த சிறு பிழையானது எத்தனை பெரிய ஆபத்தை கொண்டுவந்து விட்டது பார்த்தீர்களா! கவலைப் படாதீர்கள்... இனி உங்களுக்கு எவ்வித தொல்லையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்!
PRESIDENT'S LIFT No use by unauthorised personnel.
பிரபல ஸ்டண்ட் நடிகர்களான உங்களைக் காண என் மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே விளையாட்டு அரங்கில் நானே ஒரு பெரிய நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருக்கிறேன்!
மறு நாள் -
ஃபார்முலாவை தேடிக் கண்டறியும் நம் முயற்சி இதனால் தாமதப்படக் கூடும், ஆனாலும் இன்றைய நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்!



அடுத்து-
பார்த்தீர்களா! ஆயிரக்கணக் கான மக்கள் உங்களைக் காண ஆவலோடு குழுமியிருப்பதை!
ஹோ! இதென்ன - விளையாட்டு அரங்கில் தண்ணீர் நிரம்பிக் கிடக்கிறதே!
இதெல்லாம் என்ன அரசரே - ஒன்றுமே விளங்கவில்லையே!
சொல்கிறேன் கேட்டுக் கொள்ளுங்கள் நீங்களிருவரும் இப்போது கீழே இறங் கப்போகிறீர்கள்... இதைவிட வியப் பான சங்கதி அங்கே கீழே உங்களுக் காக காத்துக் கொண்டிருக்கிறது!


நீர் நிரம்பிக் கிடக்கும் ஸ்டேடியத்தின் மத்தியில் சிறு நிலப்பரப்பு தீவுபோல் தெரிகிறது...ஏதோ ஸ்டண்ட் வேலைக் காக அமைக்கப்பட்ட செட்டப்-போல் தோன்றுகிறது...
ஆமாம்—அதுவே தான் மிஸ்டர் ஜார்ஜ்!



டி.வி. நிகழ்ச்சியின்போது நீங்கள் நிகழ்த்திக்காட்டிய தீரச்செயல்களை இப்போது என் மக்கள் நேரிலேயே கண்டு களிக்கப் போகிறார்கள்!
இந்த யோசனை அவ்வளவாக எங்களுக்கு பிடித்தமில்லை என்பதை அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்...
என் செல்லப் பிராணி-குரங்கு நீங்கள் உடனே கீழேபோக வேண்டுமென்று விரும்புகிறது! அதன் விரோதத்தை சம்பாதித்துக்கொள்வது உங்களுக்கு நல்லதல்ல!
ஓ...ஹோ—ம்...சரி...
லோரியும், தெட்டும் ஹெலி காப்டரிலிருந்து கயிறுகள் மூலம் கீழே இறக்கப்பட்டனர்!
வேட்டையர் வாழ்க! ஹாய்... ஹாய்...!
நம் அரசர் பீட்டோ... நீடூழி வாழ்க! ஹாய்...ஹாய்!


பார்வைகள் ரொம்பவும்தான் இரசித்து ஆரவாரம் செய்கிறார்கள்!
உண்மைதான் - ஆனால் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று தான் தெரியவில்லை!
பீட்டோ மேடையில் தோன்றினார்...
என் அன்பு மக்களே! நான் ஏற்பாடு செய்திருக்கும் இந்த பிரம்மாண்டமான நிகழ்ச்சியிலே நீங்கள் பெரிதும் விரும்பி இரசிப்பீர்கள் என்று நினைக்கிறேன்...காட்சி தொடங்கப்போகிறது...
...கதவை திறந்து விடுங்கள்!
என்ன மாதிரியான நிகழ்ச்சி இது? அடுத்து என்ன நடக்கப் போகிறது?



கதவு ஏதும் கண்ணில் படவில்லையே..ஜார்ஜ்?
ஆனால்—நீர்மட்டத்துக்கு கீழே...
அதைத் தொடர்ந்து—


டிரேக்! அங்கே பார்!
முதலைகள்! ஒவ்வொன்றும் ஆளை, ஒரே முழுங்காக முழுங்கி விடுமளவுக்கு ராட்சஸ வடிவில்!
நேராக நம்மை நோக்கி பாய்ந்து தேடி வருகின்றன!
நாம் வகையாக மாட்டிக் கொண்டு விட்டோம்!


ஆ...ஆள் விழுங்கி முதலைகள்! யாருமே அவைகளை எதிர்த்து நின்று தப்ப முடியாது!
பீட்டோ மட்டும் அந்நிகழ்ச்சியை மகிழ்ச்சியோடு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்.
மயிர்க்கூச்செறிய வைக்கும் அற்புத மான காட்சி...
நீந்தி தப்பிக்க வழியில்லை... நம் துரதிர்ஷ்டம் நாம் கையோடு துப்பாக்கிகளை கொண்டு வரவில்லை!
இந்த பாருங்கற்களை பெயர்த்தெடு டிரேக்!


நல்லயோசனை தான் இது! சைத்தான்கள் பின்வாங்கிச் செல்லத் தொடங்கி விட்டன பார்!
மோசம் போனோம்... பின்னால் பார்— அந்தப்பக்கமாக நிறைய கரையேறி வருகின்றன!
டுசேக்..ஒரு குட் ஐடியா! மரத்தில் தொங்கும் கொடிகளை நான் சேகரித்துக் கொள்ளும் வரை நீ அந்த சைத்தான்கள் முன்னேறி வராதபடி பார்த்துக் கொள்...
கீழே கிடக்கும் இந்தக் கட்டைகளை ஒன்று சேர்த்துக் கட்ட கொடிகள் பயன்படும்!


கட்டுமரம் ரெடி! நீயும் ஓடிவந்து ஏறிக் கொண்டு விடு!


முதலைகள் நம்மை தொடமுடியாத வாறு வேகமாக ஸ்டேடியம் பக்கம் சென்று கரையேறி விட்டால் நாம் தப்பி விடலாம்!


இந்த 'ஓட்டப் பந்தயத்தில் தோற்றுப் போனால் நாம் இழக்கப் போவது வெற்றிப் பதக்கத்தையல்ல— நமது உயிரை!
GATE-7
ஏற்கனவே அவை நீருக்குள் இறங்கிவிட்டன பார்... இன்னும் வேகமாக துடுப்புப் போடு!


பிரமிப்பில் மூழ்கிப் போயிருந்தது மக்கள் கூட்டம்...
கண்ணிமைக்கும் பொழுதில் கையிலகப்பட்ட கொடிகளையும், மரக்கட்டைகளையும் கொண்டு கட்டுமரம் தயாரித்த யுக்தி பாராட்டிற்குரியது...
திடீரென்று—
கட்டுமரம் சுழன்றுகொண்டு விட்டதே...உயிர்பிழைக்கும் வாய்ப்பை ஒரேடியாக இழந்து விட்டோமென்று தோன்றுகிறது!
ஆ ஆ...!
ஐ...யோ!


நான் திட்டமிட்டிருந்ததை விட நிகழ்ச்சி மிக சுவாரஸ்யமாக போய்க்கொண்டிருக்கிறது 'வேட்டையர்க்கும்' முதலைகளுக்கும் நடக்கும் இந்தப போட்டியில் யார் வெற்றியடையப் போகிறார்கள் என்பதுதான் புதிர் நிறைந்த கேள்வி!
...ஜீவ மரணப் போராட்டம் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு வேகமாக நீந்து!
நமக்கும் அந்த சைத்தான் களுக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்துகொண்டே வருகிறது பார்!
கண்ணிமைக்கும் பொழுது நான் தாமதித்திருந்தால் அது என் காலைகடித்து குதறிவிட்டிருக்கும்!
மயிரிழையில் உயிர் பிழைத்து விட்டோம்...!


மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது மக்கள் கூட்டம்...
மயிர்க்கூச் செறியும் சாகஸச் செயல்!
அற்புதம் நிகழ்த்தி விட்டார்கள்... பலே!
வியத்தகு சாதனை நிகழ்த்தி விட்டீர்கள் தோழர்களே... தலைசிறந்த வீரர்களுக்கு மட்டுமே நான் அளிக்கும் இந்த அரிய விருந்தை உங்களுக்கு அளிப்பதில் பெருமிதமடைகிறேன்!
கிராதகன் என்னமாய் வேஷம் போடுகிறான்... இவனைப்பற்றி இன்னமும் புரிந்து கொள்ளாத முட்டாள்களல்ல நாங்கள்!
வெற்றி முழக்கத்தோடு ஊர்வலமாக அனைவரும் திரும்பி வந்தனர்...
நான் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சி உங்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சியை கொடுத்திருக்கும் என்று நம்புகிறேன்.


பின்னர்—
இனி நாங்கள் போய் எங்கள் அறையில் ஓய்வெடுத்துக் கொள்ளலாமல்லவா?
இந்த ஏற்பாடு நானும், டிரேக்கும் மீண்டும் ஃபார்முலாவை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியை மேற்கொள்ள வகை செய்யும்.
இப்படி அவசரப் பட்டால் எப்படி? உங்களுக்கு இன்னொரு வியப்பூட்டும் செய்தி—
நீங்களிருவரும் கைது செய்யப் படுகிறீர்கள்- இக்கணமே!
எ...எ...ன்ன?
நீங்களிருவரும் உளவாளிகள் என்ற உண்மையை நான் அறிவேன்...என் இரகசிய ஆய்வுக்கூடத்தில் நுழைந்த விஷமச் செயல் ஒன்று போதும் உங்களை இனம் காட்ட!


அங்கே ஒருபக்கம் நியூக் ளியர் ஏவுகணைகளை தொழில்நுட்பநிபுணர்கள் தயாரித்துக் கொண்டிருக் கிறார்கள்...
F-70
இன்னொரு பக்கம் பிரிட்டனிலிருந்து நான் கவர்ந்து கொண்டு வந்த ஃபார் முலாவின் பயனை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என் விஞ்ஞானிகள்.
விரைவிலேயே அனைத்து நாடுகளையும் அணு ஆயுத போர் ஒன்றை முனைவைத்து அச்சுறுத்தப் போகிறேன். உலக மொத்தமும் விரை விலேயே என் கட்டுப்பாட் டுக்குள் வரப்போவது உறுதி!


ஸ்டேடியத்தில் நடந்து முடிந்த சாகஸ நிகழ்ச்சியில் நீங்கள் பிணமாகி போவீர்கள் என எதிர்பார்த்தேன்...தப்பி விட்டீர்கள்!
அப்படி சுவர் அருகே போய் நில்லுங்கடா...!
'சுடு' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள் அரசரே...இவர்களின் மண்டைகளை பிளந்து விடுகிறோம் பிளந்து!
ஊஹூம்...வேண்டாம்! அதில் சுவாரஸ்யமே கிடையாது!
குதிகாவின் வசம் இவர்களை ஒப்படைத்துவிட தீர்மானித்து விட்டேன்!
க்க்ர்ர்......ர்ர்ர்!


கைகால்களை ஒடித்து உடம்பிலுள்ள மற்ற எலும்புகளையும் நொடியில் நொறுக்கி உங்களை உருத்தெரியாமல் செய்துவிடும் குஹூகா. ஒரே நேரத்தில் பத்துப் பேரை சமாளிக்கும் ஆற்றல் கொண்ட அதனிடம் உங்கள் பாச்சா பலிக்காது தம்பிகளா!
ஆஆஆ...!
ஐ...யோ— மூச்சு விட முடிய வில்லையே!


ஊஹூம் இதுகூட சுவாரஸ்யப்பட வில்லை நீங்கள் சித்திரவதைப் பட்டு சாக வேண்டும்!


ம்...என்று சொல்லுங்கள் அரசே... இவர்களை சுட்டுத்தள்ளி விடுகிறோம்!
அவசரப்படாதீர்கள் வேறொரு திட்டம் வைத்திருக்கிறேன் நான்!


இப்போது இவர்களை விடுவித்து அனுப்பி வைக்கப்போகிறேன்!
அரசே, வந்து...
நீங்கள் நினைப்பது மாதிரி இல்லையடா முட்டாள்களா... முதலில் இவர்களை ஹெலி காப்டரில் ஏற்றுங்கள்— மற்றவைகளை பிறகு சொல்கிறேன்!
இந்தக் கிராதகன் நம்மை என்ன செய்ய நினைத்திருக்கிறானோ தெரியவில்லையே!
தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறோம்... நடப்பது நடக்கட்டும் முடிந்தவரை சமாளிப்போம்!
ஏறுங்களடா நாய்களா!


என் பயிகூடாக்களை சென்று வாருங்கள்... உங்களை பின்னர் சந்திக்கிறேன்!
நாம் எங்கே போகிறோம்? அங்கே என்ன நடக்கப் போகிறது?
வாயைத் திறந்து எதாவது சொல்லித் தொலையுங்களேன்!
ஒரு விசித்திரமான அநுபவம் உங்களுக்கு காத்துக் கொண்டிருக்கிறது— அவ்வளவு தான் சொல்ல முடியும்...
பின்னர்—
இதை மாட்டிக் கொள்ளுங்கள்...
ஓகோ எங்களை இப்படித் தான் விடுவிக்கப் போகிறீர்களா?
என்னது, பாராசூட்டா?


கரெக்ட்...! அதுவும் இக்கணமே...!
கீழே அடர்ந்த கானகப் பகுதியாக அல்லவா காட்சியளிக்கிறது!
அங்கே பலவகையான அபாயங்கள் இருக்கக்கூடும்!
அதுமட்டுமல்ல தம்பிகளா...அரசர் தலைமையில் ஒரு கூட்டம் உங்களை மனித வேட்டையாடும் முயற்சியில் இறங்கியிருக்கிறது!


ம்...போங்கடா!
ஆ...வ்!
அடர்ந்த மரங்களினூடே போய் இறங்கினால் நம் எலும்புகள் நொறுங்கி விடலாம்...திறந்த வெளியில் இறங்க முயற்சிக்க வேண்டும் முதலில்!
மனித வேட்டையை சமாளிக்க நம்மால் ஆகாது ஜாக்!
ஒருவழியாக திறந்த வெளிக்கு நேரே வந்து சேர்ந்துவிட்டோம்!
தரையிறங்கிய பின்னர் இந்த அடர்ந்த கானகத்தினூடே எப்படி வழியை கண்டுபிடித்து வெளியேறப் போகிறோமோ தெரியவில்லை!


எப்படியேனும் உயிரோடு இங்கிருந்து நாம் வெளியேறியாக வேண்டும் ஜார்ஜ்! ஃபார்முலாவை கைப்பற்றி பீட்டோ நியூக்ளியர் போர் தொடராமல் தடுக்க வேண்டியபணி இருக்கிறது!
நீ கூறுவது மிகவும் சரி! பிரச்னைகளைக் கண்டு கலங்கி விடக்கூடாது—எஸ்.ஐ.-6ல் நமக்கு சொல்லிக் கொடுக்கப்பட்ட அடிப்படை பாடம் இதுதானே!
அடுத்து—
கிகிகிர்...
என்ன... சப்தம்?
சிறுத்தை! அதைச் சமாளிக்க எந்த ஆயுதமும் நம்மிடம் இல்லையே...என்ன செய்வது!
வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள். இப்போது பார்!


பாராசூட்டின் மறுமுனையைப் பிடி ஜார்ஜ்!
கிர்ர்...ர்ரரர!
அப்படியே மூட்டை போல் கட்டு!
பிரமாதமான யோசனை!
இன்னொரு பாராசூட்டை யும் கொண்டுவந்து போர்த்தி விட்டால் லேசில் விடுவித்துக் கொள்ள முடியாது!


இந்த சிறுத்தையைவிட கொடிய மிருகம் அந்த பீட்டோ!
கானகத்தைவிட்டு வெளியேற ஏதாவது வழித்தடம் தென்படுகிறதா என்று தேடிப் பார்ப்போம் வா!


இதற்கிடையே—
வேட்டையாட செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தாகி விட்டதா?


ஹே...டிரேக்! அதிர்ஷ்டக் காற்று நம் பக்கம் வீசத் தொடங்கிவிட்ட தென்று நினைக்கிறேன்—அதோ பார் ஒரு வழித்தடம்!
இந்த தடம் நம்மை எங்கே இட்டுச் செல்கிறதோ - தெரியவில்லை... எப்படியும் இந்த காட்டைவிட்டு வெளியேறி விடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது!
மறுபடியும் எஸ்.ஐ.6 பயிற்சி கற்றுத்தந்த பாடம் பலன் தந்துவிட்டது. ''தளர்ச்சி யடையாதே'' வெற்றியை சந்திப்பாய்!
பீட்டோ நன்றாக ஏமாந்து போகப் போகிறான்...எதற்கும் கண்ணையும் காதையும் கூர்மையாக வைத்துக் கொண்டிரு!


பிறிதோரிடத்தில்...
வீரர்கள் புறப்பட தயாராக இருக்கிறார்கள் அரசே!
ஆல்ரைட்! வேட்டை இன்றைக்கு பிரமாதமாக அமைய வேண்டும்!
அந்த இரண்டு உளவாளிகளும் இந்த பிராந்தியத்தில்தான் தரையிறங்கி-யிருக்கிறார்கள்... அந்த இரண்டு பன்றிகளையும் நான் என் கையால் கொல்ல வேண்டும்!


அவர்களை என் கையால் கொன்றால்தான் என் ஆத்திரம் அடங்கும்!
புரிந்துகொண்டுவிட்ட மாதிரி தலையை ஆட்டியது குதூரகா!
பின்னர்—
அப்பப்பா! ஒரே தாகமாக இருக்கிறது... அந்த ஓடையில் தண்ணீர் பருகிவிட்டுச் செல்லலாம் வா!
சரி...ஆனால் அந்த ஓடை திறந்த வெளியில் இருக்கிறது என்கிற விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்!
அவர்கள் தண்ணீர் பருகிக் கொண்டிருந்தபோது—
டுமீல்!
ஆகா...தேவாமிர்தம்தான்! ம்ஹூ ..அதென்ன சப்தம்?
தோட்டா ஒன்று - பாறையை தாக்கிய ஓசை!


விஷமம் பண்ணாமல் இங்கே வாருங்கள்—
ஓடித் தப்ப நினைத்தால் கால்முட்டி
எலும்பை பெயர்த்து விடுவேன்...
ஹாம் எனக்கு தாகமெடுத்ததால்
தானே என்னிடம் நீயும் இப்படி
மாட்டிக்கொண்டு விட்டாய்!
உங்களை பிடித்ததற்காக அரசர் பீட்டோவிட
மிருந்து எனக்கு நிறைய வெகுமதி கிடைக்
கப்போவது உறுதி...ஹா...ஹா!
நேர் பின்னாலிருக்கும் ஆபத்தை
அறியாமல் கனவு கண்டு கொண்
டிருக்கிறான் பயல் — பாவம்!
ஆ ஆ...மலைப்
பாம்பு!


ஐயோ...அம்மா... செத்தேன்!
பாய்ந்து அந்த ரைபிளை எடு ஜார்ஜ்!
ஊஹூம் இவனும் செத்துவிட்டான். முதுகெலும்பு சிதைந்து போய் விட்டிருக்கிறது!
எதிரிகள் அருகாமையில் வந்து கொண்டிருக்கக் கூடும்...வா போய் விடலாம்!


நில்லுங்கள்...! ஓடிகூட எடுத்துவைக்கக் கூடாது!
ஜேக்!
ஓடிவா...ஏனென்றால் நம்மை பீட்டர் தன் கையால் கொல்ல தீர்மானித் திருக்கிறான்.
ஊம்! இன்னும் வேகமாக போ...அவர்களை தப்ப விட்டுவிடக் கூடாது!
கவலைப்படாதே...ஜீப்பின் வேகத்துக்கு யாரால் ஈடு கொடுக்க முடியும்?


ஆ...அம்...மா! இனியும் என்னால் ஓட முடியாது ஜார்ஜ்!
ம்...அப்படியானால் வேறு ஏதாவது ஒரு உபாயத்தை தீர்மானிக்க வேண்டும்!
ஜீப்பை நிறுத்து!
ஒருவன் மயங்கி விழுந்து கிடக்கிறான்... மாட்டிக் கொண்டு விட்டான் நம்மிடம்!
இவனுடைய சகா அதிக தூரம் ஓடிப்போயிருக்க முடியாது! அவனையும் சுலபமாக பிடித்துவிடலாம்!




ஜீப்பை தடுத்து நிறுத்த மயங்கிக் கிடப்பவன் போல் நடித்த டிரேக் சட்டென்று எழுந்து கொண்டான்.
மரத்திலிருந்து நீ பாய்ந் ததும் மிரட்சியிலேயே பாதி உயிர் போய் விட்டிருக்கும் இவன்களுக்கு!
இனி இவர்களால் தொல்லை இராது!
வேகமாக இங்கிருந்து விலகிச் செல்ல இந்த ஜீப் உபயோகமாக இருக்கும்.
...ஆனால் இந்த கானகத்தினூடே பீட்டோவின் ஆட்கள் நாலாதிசை களிலும் பரவியிருக்கக் கூடும்!
யாரும் எதிர்ப்பட்டால் நான் கவனித்துக் கொள்கிறேன்... நீ இதே தடத்தில் வேகமாக ஜீப்பை ஓட்டு.
பீட்டோ ஒரு கிறுக்கன்... அந்த ஃபார்முலா அவன் கையில் இருக்கும்வரை எப்படிப்பட்ட விபரீதம் வேண்டுமானாலும் நிகழலாம்!


அந்த மனித வேட்டையில் நேரடி பங்கேற்க பீட்டோ வும் ஆர்வத்தோடு வந்து கொண்டிருந்தான்...
என் ஆட்கள் அந்த இரண்டு உளவாளிகளையும் வெகு சீக்கிரத்தில் பிடித்துவிடுவார்கள்... குஹாகா!
அவர்களுடைய விழிகளில் காணப்படும் மரண பயம் நான் விரும்பி இரசிக்கும் ஒரு அருமையான காட்சி யாக இருக்கும்!
குர்ர்...ராக்க்!
சில நிமிடங்களுக்குப் பின்—
மீண்டும் ஆபத்து நம்மைத் தேடிவந்து சேர்ந்து விட்டிருக்கிறது டிரேக்!
டயரை குறிவைத்து சுடுங்கள்... அவர்களை அரசருக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்த வேண்டும் மறந்து விடாதீர்கள்!


கவலைப்படாதே டிரேக்! தாக்குவதில் நான் முந்திக்கொண்டு விடுவேன்!


ஐ...யோ!
ஆஆ...!
இன்னும் இரண்டு கோஷ்டி வருகிறது ஜார்ஜ்!
பழைய யுக்தி பலனளிக்காது எனவே—
இது எப்படி—
பட்-பட்-பட்
முறிந்துவிழும் மரம் அவர்களை தடுத்து நிறுத்திவிடும்!



பின்னாலிருந்து இன்னொரு ஜீப் வந்ததை அவர்கள் கவனிக்க தவறிவிட்டார்கள்...
இப்படி முட்டினால் அவர்கள் நிலைகுலைந்து சரிவது நிச்சயம்!
என்னது?
ஆ...வ்! யாரது?
ஜைப்...ப்!
புதைமணல் நொடியில் நம்மை விழுங்கி ஏப்பமிட்டு விடும்!
எட்டி அந்த மரக் கிளையைப் பிடிக்க முயற்சி செய்!


நம் எடையை இந்தச் சிறுகிளை தாங்குமா? என்று—
ஆ...ஐயோ!
ஹா...!
இன்னும் தலை மட்டும் தான் பாக்கி!
சில விநாடிகளில் அதுவும் உள்ளே போய்விடும்!
கடைசிவரை இருந்து வேடிக்கை பார்த்து விட்டுப் போகலாம்!


கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே போய்க் கொண்டே இருக் கிறார்கள்...பிரமாதமான வேடிக்கை!
கண்கொள்ளாக் காட்சி...!


போய்விட்டார்கள்— ஒரேயடியாக!
அவர்களுடைய கதை முடிந்தது!
அடேய... முட்டாள்களா!
அவர்களை காப்பாற்றியாக வேண்டும்! வழியைவிட்டு விலகி அப்பால் போங்கடா முண்டங்களா!
அரசர் பீட்டோ!
அ...அ...வர்கள் இம்மாதிரி சாவதை நீங்கள் விரும்பக் கூடும் என்று எதிர்பார்த்தோம்!


ம்...வேகமாக போ குருகா! அவர்களை வெளியே இழுத்துப் போட உன்னால் மட்டும்தான் முடியும்!
ஆர்ம்க்ர்...ர்ர்!
உர்ம்ர்ம்...ர்ர்!
அக்க்ர்...ர்ர்!
ம்...இது டிசேக்! இனி அடுத்த ஆசாமி ம்.. சீக்கிரம்! பயல் செத்துப் போய்விடப் போகிறான்!


எங்களை உன் கையால் கொல்ல வேண்டும் என்ற உன் தீராத ஆசைதானே நீ எங்கள் மீது காட்டும் கருணைக்குக் காரணம்!
இந்த மனித 'வேட்டை'யை ஏற்பாடு செய்ததின் நோக்கமே அதுதான் நண்பரே!
உங்களைப்போல் விசேட எதிரிகளுக்கு மரணதண்டனையும் விசேடமான முறையில் அமையவேண்டும் என்பது என் விருப்பம்...நாம் மீண்டும் அரண்மனைக்குத்தான் செல்லவேண்டும்!
ஏறிக் கொள்ளுங்களடா நாய்களா! அங்கே போய் சுத்தம் பண்ணிக் கொள்ளலாம்!
அரண்மனையில்-
ம்...ஓய்வெடுத்துக்கொண்டு விருந்தும் சாப்பிட்டாயிற்று அல்லவா...கதிரியக்க தடுப்பு ஃபார்முலாவைக் கொண்டு நான் எவ்வளவுதூரம் முன்னேற்றம் கண்டிருக்கிறேன் என்பதை காட்டுகிறேன்...
அதையடுத்து—


அரண்மனையின் கீழேயுள்ள இரகசிய ஆராய்ச்சிக் கூடத்தில் செய்யப்படவிருக்கும் நூற் றுக்கணக்கான நியூக்ளியர் ஏவுகணைகளின் முன்னோடி அதோ!
பீட்டோ கிறுக்கன் மட்டுமல்ல... ஆபத்தான ஆசாமியும் கூட இவனுடைய முயற்சிகளை எப்படி-யேனும் முறியடித்தாக வேண்டும்!
பின்னர்...
இதோ கதிரியக்கத்தை செயலிழக் கச் செய்யும் இந்த ஃபார்முலாவின் செயல்திறனை விஞ்ஞானிகள் சோதனை செய்து முடித்து விட்டார்கள் இது என்னுடைய துருப்புச் சீட்டு!
... அது உன்னிடம் இருக்கக் கூடாது!
இது உன் கையிலிருக்கும்வரை உலக அமைதிக்கு எப்போதுமே அபாயம் இருந்துகொண்டே தான் இருக்கும், எனவே...


...எரிந்து போகட்டும்!
ஹாஹ்...ஹா! அதன் போட்டோ பிரதிகள் ஒரு கட்டு என்வசம் இருக்கிறது! இந்த பீட்டோவின் திட்டத்தை முறியடிக்க பிரிட்டிஷ் கண்டெலி-களான உங்களால் ஒருக்காலும் முடியாது!
சரி...இனி உங்களுடைய கடைசி அத்தியாயத்துக்கு வருவோம்! அந்த மேடையில்தான் பலப் பரீட்சை நடக்கப் போகிறது!
வேடிக்கையான ஆசாமிதான் நீ!
யாரோடு மோத வேண்டும் நாங்கள்!


என்னோடும்,
குதுரகாவோடும்தான்!
அதையடுத்து—
போட்டியின் விதி மிகவும் நியாய மானது—இருவருக்கு எதிராக இருவர்...ஆயுதங்கள் கிடையாது உடல் உரமும் உறுதியான கைகளும்தான் பலம்!
நான் உங்களைவிட பலசாலி என்பது ஒரு உண்மை. குதுரகாவின் பலமோ - ஆச்சரி யத்தில் ஆழ்த்தக் கூடியது!


இப்படி வேகமாக வலுவாக
முந்திக்கொண்டுஒருபாய்ச்சல்
பாய்ந்தால் கொஞ்சம் கொஞ்ச
மாக வெற்றியை உறுதி
செய்துவிடலாம்!
அ.ஆ...வ்!
பாவம் குரங்காவின் ஆற்றலை
மிகவும் குறைவாக மதிப்பீடு
செய்துவிட்டாய் தம்பி!


...நீ செய்த அதிர்ஷ்டம் - இதன் பின்னரும் உன் மண்டை இரண்டாக பிளந்து விடவில்லை!
உப்...உப்...ப்ப்!


ம்...இப்போது உன்னுடைய முறை வா...வந்து மோதிப்பார் என்னிடம்!
நான் மறுத்தால்... என்ன செய்வாய்?
மறுத்தால்...அதோ அங்கே இருந்து தோட்டாக்கள் உன் தலையை குறிவைத்து உடனே வந்துசேரும்!
வேறு வழியில்லை...இந்த முரடனோடு மோதிப்பார்த்து விடவேண்டியதுதான்!
ம்...இதுதான் புத்தி சாலிக்கு அழகு - வா...வா...!


இந்தா...வாங்கிக் கோள்!
ஆனல்...
இந்தப் பிடி எப்படி?
அம்!
வேடிக்கையாக இருக்கிறதல்லவா?
ஆ...ஆ...!


போய்த் தொலை!
ஐ...யோ!
அ...ம்...மா!
அடி... பலமோ!
நீ எனக்கு சம ஜோடி அல்ல... இனியும் உன் மீது நான் கை வைத்தால் எனக்கு அது அவமானம்...உன் கதையை முடிக்கும் பொறுப்பு இனி குஜ்காவினுடையது!
எ...ன்...முதுகு—


அரசரின் கோபத்தை சம்பாதித்துக்கொண்ட அவர்களுடைய சாவு மிகவும் பரிதாபமான முறையில் நிகழப் போகிறது!
பலப்பரீட்சை முடிந்து விட்ட மாதிரிதான்...
ஆண்டவனே! அந்த சைத்தான் என்மீது பாய வருகிறதே!
ஹா...ய்ய்!
வேகமாக உருண்டு நகர்ந்து கொண்டு விட வேண்டும்!


டம்!
இப்படி ஓங்கி ஒரு உதை நிச்சயம் இந்த மிருகத்தை நிலை குலைந்து போகச் செய்துவிடும்!
அது தடுமாறி நிலைத்து நிற்கும் இந்த விநாடியை சரியாகப் பயன் படுத்திக்கொண்டுவிட வேண்டும்!
ஹூஊஊ...?


இப்படி தட்டாமலை சுற்றி வந்தால் சுகமாக இருக்கிறதல்லவா?
இனி—எதிர் திசையில்...
ஏய் குஜூரா...முட்டாள் மிருகமே— அவனை தாக்கு...
ஊஹூம்...பிரயோஜனப் படாது பீட்டே—அது திக் பிரமையில் குழம்பிப் போய் இருக்கிறது!


இப்போது அது இருக்கும் நிலையில் இப்படி ஒரு விரலால் தள்ளிவிட்டாலும் போதும்...
...அம்பேல் தான்!
அபாரம்...அற்புதம் நிகழ்த்திவிட்டாய் நண்பனே!
இன்னும் பலப்பரீட்சை முடியவில்லை...ஆனால் இனிமேல் போட்டி சம பலம் கொண்டதாக இருக்கும்!


இனி திணறிப் போவாய், ரீட்டோ!
திக் பிரமையில் மூர்ச்சித்துக் கிடக்கும் குஜாகாவினால் இனி உனக்கு எந்த உதவியும் கிடைக்கப் போவதில்லை!


வீரர்கள் வேகமாக மேடைக்கு ஏறிவந்தார்கள்...
ம்...சீக்கிரமாக குறூகாவை சுயவுணர்வு திரும்ப செய்யுங்கள்...
...நான் இந்த பிரிட்டிஷ் கன்டெலிகளை எப்படி வதம் செய்து கொல்கிறேன் என்ற அரிய காட்சியை குறூகாவும் கண்டுகளிக்க வேண்டும் என்பதால்தான்!
சட்டென்று பாய்ந்து தாக்கினார் பீட்டர்!
உங்கள் இருவரையும் ஒரு சேர சமாளிப்பது ஒன்றும் எனக்கு பெரிய கஷ்டமல்ல!


இப்படி ஒரு பாய்ச்சல்...
அதம்...!
ஆ...வ்!
வகையாக மாட்டிக் கொண்டு விட்டான்...சட்டென்று இவ-னுடைய காலை வாரிவிடு டிரேக்!
ஆ-ஆ...ஹைம்!
இனியும் சும்மா மிரட்டிக் கொண்டு திரியமுடியாது நீ... இப்போது நீ எங்களிடம் தோற்றுப் போனாய்!


இன்னமும் என் பலம் என்னவென்று அறியாத மடையர்கள்!
ஊய்...ய்ய்!
அ...ம்...மா!
பீட்டோ யாரிடமும் தோற்றுப் போனதாக சரித்திரம் கிடையாது...போ...நீயும் போய்ச் சேர்ந்துகொள் உன் தோழனோடு!
அந்நாளில் ஒரு தலைசிறந்த மல்யுத்த வீரன நான் என்ற விஷயத்தை உங்களுக்கு சொல்லத் தவறிவிட்டேன்!


இப்படி முழங்கையால் ஒரு இடி.
அம்!
இப்படி முழங்கால் முட்டியால் ஒரு தாக்கு.
ஹாஹ்.. ஹா! அவர்கள் இருவரையும் மேடைக்கு வெளியே தூக்கி எறிந்து விட்டேன்! தோற்றுப்போய் விட்டார்கள் என்னிடம்... ஹீ ஹீ ஹீ!


இது ஒன்றும் பெரிய காரியமல்ல... மிகச் சுலபமாக எழுதிவிடலாம் இவர்களுடைய இறுதி அத்தியாயத்தை!
ஆ-ஆ-ஆ...!
அரசே... அவர்கள் இன்னமும் தாக்குப் பிடித்துக்கொண்டு தானிருக்கிறார்கள்!
இந்தா... தொலைந்தீர்கள் இத்தோடு!
மாட்டிக்கொண்டு விட்டான் வகையாக!
மேடையின் விளிம்பை விரல்களால் பற்றி ஊசலாடிக் கொண்டிருக்கிறான் ஒருவன்!



இந்த கணநேர அவகாசம் போதும்...
ஆஆ...!
மின்னலென பாய்ந்து மேலேறி வந்தனர் இருவரும்!
எங்கள் கை ஓங்கி விட்டது பீட்டர்!
குஹாகா? எங்கே தொலைந்து போனும் ஓடி வா...உன் உதவி தேவைப்படுகிறது எனக்கு!
க்க்ர்ர்...ரார்ர்!
அப்பாடா...ஒருவழியாக குஹாகாவுக்கு சுயவுணர்வு திரும்பிவிட்டது!
குஹாகா...அரசர் அபயக் குரல் கொடுக்கிறார்... போ...போய் உதவிசெய்!


தன் மாஸ்டர் தாக்கப்படுவதை அதனால் சகித்துக்கொள்ள முடியாது அந்த இரு பிரிட்டிஷ் உளவாளி களும், இதனிடம் செமத்தியாக வாங்கி கட்டிக்கொள்ளப் போகிறார்கள் பாரேன்!
கிர்ர்ர்...
கோபத்தில் கொந்தளித் துப் போயிருக்கிறது குதூகா!
மோசம் போனோம்...அந்த கொரில்லா மீண்டும் ஆங்காரத்தோடு வருகிறது!


கிர்ர்ர்...
இனியும் இங்கே இருந்தால் ஆபத்து!
வா...ஓடிப்போய் விடலாம்!
எஃகு விட்டத்தை பற்றிக்கொண்டு மேலே போகலாம்!
அரண்மனையின் கீழேயிருந்த இரகசிய ஆய்வுகூடத்தில் அமைக்கப் பட்டிருந்தது அந்த மேடை!
விடாதே...பிடி அடித்து நொறுக்கு குதுாகா...


இங்கிருந்து இனி நாம் எங்கே போவது?
எனக்கும் அதே குழப்பம் தான்...பீட்டோனின் ஆட்கள் நம்மை வளைத்துக் கொண்டு விடுவார்கள்!


இதுவரை மிகத் திறமையாகத் தான் சமாளித்து விட்டார்கள் அந்த இளைஞர்கள் இருவரும்!
ஆனால் கொரில்லாவிடம் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது அவர்களால்!


பீட்டே பொறுமையிழந்து விட்டான்—
அந்தப் பொடியர்கள் பலப் பரீட்சை மேடையை சர்க்கஸ் கூடாரமாக்கிவிட்டார்கள்! கொடு இப்படி அந்தத் துப்பாக்கியை!
இந்தாருங்கள் அரசே!
இனியும் அவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது!
ஹெஹ்...! பதுங்கிக் கொள்ள இடமோ வகையோ கிடையாது!
நம் முடிவு இதுதான் போலும்!


ஆனால் அப்போது -
உப்...ப்ர்!
...ஒரு தோட்டா கொரில் லாவின் புஜத்தை உராய்ந்து கொண்டு சென்றது..
திக்பிரமையில் தெளிவிழந்து குழம் பிப்போயிருந்த அந்தக் கொரில்லா வுக்கு தன்னை காயப்படுத்திய பீட்டோ ஒரு எதிரியாக தெரிந்ததில் ஆச்சரியமில்லை...
அதன் விளைவு—
ஏய் சனியனே! வழியைவிட்டு விலகித் தொலை—நான் அந்த நாய்களை கட்டு வீழ்த்த வேண்டும்!
104


குரங்கின் எண்ணப்போக்கு வேறுவிதமாக இருப்பதாக தெரிகிறது!
துப்பாக்கியை பயன் படுத்தியது பீட்டோ வின் முட்டாள்தனம்!
க்ர்ர்...ர்ர்!
கிட்டே வராதே—சுட்டு விடுவேன்! ஏ...அறிவு கெட்ட முண்டமே...நிஜ மாகவே கொன்று விடு வேன் - விலகிப்போ!
ஆ...! தோட்டாக்கள் இல்லை - தீர்ந்து விட்டன போலும்!


சட்டென்று மண்டியிட்டு உயிர்
பிச்சை கேட்டான் பீட்டோ!
குதுரகா.. தயவுசெய்து என்னை
கொன்றுவிடாதே...என்ன இருந்
தாலும் ~ான் உன்னுடைய
மாஸ்ட -ன்பதை மறந்து
விடாதே! என்னை மன்னித்துவிடு!
குதுரகா இகழ்ச்சியாக
திரும்பி நடக்கிறது பார்!
பீட்டோ...ஒரு
கோழை!
இனியும் மதிக்கத் தகுந்தவன்
அல்ல இந்த கோழை என்று
அந்தக் கொரில்லா தீர்மானித்
திருக்கக் கூடும்!
அங்கே குழுமியிருந்த
வீரர்களும், அதே கருத்தை
ஒருமித்து வெளிப்படுத்தினர்.
இனியும் அவர்
நம்மை அடக்கி
ஆளமுடியாது!
ஒழிக
பீட்டோ!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்:
S. விஜயன், முகவரி : லயன் காமிக்ஸ், த. பெ. 55.
சிவகாசி - 626 123. போன் : 1159. வெளியீடு எண்: 20.
அச்சிட்டோர் : முத்து ஃபைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ்,
சிவகாசி.


விச்சு & கிச்சு
கிச்சு "விளையாட்டு முரசு" பத்திரிக்கையின் சார்பாக இன்றைய ஆட்டத்தை ஃபோட்டோ எடுக்கப் போகிறேன்!
THE EVENING SPORT
ஓ.கே. விச்சு! ஜூபா பந்தினை லாவகமாகப் பிடிக்கும் பொழுது ஃபோட்டோ எடு!... அருமையாக இருக்கும்!
அடடா! கிச்சு பந்தைத் தொடக்கூட இல்லை!



இம்முறையும் அதே கதை தான்!
விச்சு... இப்பொழுது வேண்டாம்... ஃபோட்டோ!
கிச்சுவின் கைகளில் பந்து படவே படாது போல் தோன்றுகிறது!
ஒருவழியாக கிச்சு பந்தை தொட்டு விட்டான்! ஃபோட்டோ எடுத்து விட்டேன்! ஆபீஸிற்கு ஓட வேண்டும்!
ஆட்டம் முடிந்த பின்—
ஜுயாவின் ஃபோட்டோ மாலைப் பேப்பரில் வந்திருப்பதால், ஒருடஜன் பேப்பர்கள் வாங்கிக் கொள்ளப் போகிறேன்!
ஹை! ஹை! ஆமாம் நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும் அந்த ஃபோட்டோவை!
TOO DAZE







புதிய ஹீரோக்கள் பற்றிய விபரம்
122-ம் பக்கம்


துப்பறியும்
அறிமுகம்!


இரும்புக்கை
உளவாளி
தோன்றும்
மனித
எரிமலை!
லயன்
காமிக்ஸ்
பொங்கல்
வெளியீடு!


1986 ஜனவரி 1ல்
வருகிறது!
பழிக்குப் பழி
வாங்கத் துடிக்கும்
ஒரு உளவாளியின்
சாகஸக் கதை!
விலை
ரூ.3/-
லயன்
காமிக்ஸ்
பிரதிக்கு முந்துங்கள்!



லயன் காமிக்ஸ்
ரூ. 2/-
ஸ்பைடர் தோன்றும்
சதுரங்க வெறியன்!
பிப்ரவரி வெளியீடு!
114

# வாசகர் கடிதம்!

● மா. வெங்கடேசன், குஞ்சாம்பாளையம்.

பக்கத்திற்கு பக்கம் விறுவிறுப்பு
படிப்பவருக்கு சுறுசுறுப்பு
அ டடே லயன் காமிக்ஸின்
அழகான அட்டையின் பளபளப்பு
வாசகர் நெஞ்சில் என்றும் லயனைப் பற்றி-
குறுகுறுப்பு

● சிங்கப் பிரியன், T P. அழகர்.

புது புது கதாநாயகர்களை உருவாக்கி வாசகர்களாகிய எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் அருமையான சிங்கத்திற்கு நன்றி!

● T.R. அமர்நாத்பாபு, 197, கச்சேரி வீதி, ஈரோடு.

வெற்றிக்கதைகளை வெளியிட்டுவரும் லயன் காமிக் ஸிற்கு நன்றி!

டெக்ஸ் வில்லர் தோன்றும் தலைவாங்கிக் குரங்கு மனதில் நீங்காத இடம் பெற்று விட்டது. படங்கள் அனைத்தும் தத்ரூபம்! கதையம்சமோ திரில்!...

● P. நாகூர் ராஜா, K.P. சரவணன், N. சாந்திநிகேதன் கோட்டை வளைவு காம்பவுண்டு, திருமங்கலம். (SRY.)

லயன் காமிக்ஸ் என்றாலே சாகஸ கடலின் சங்கமம் என்று பொருள். இந்த கடலில் கிடைத்த நன்முத்து டெக்ஸ் வில்லர்! அவர் நிகழ்த்தும் சாகஸங்கள் ஆங்கில திரைப் படத்தை காண்பது போன்ற பிரமை. தீபாவளி இதழ் உண்மையிலே எங்களுக்கு கிட்டாத அமுதம்...சார்!

● A. அசரப் அலி, 52, தெற்குபார்க் வீதி, கோபி.

டெக்ஸ் வில்லர் தோன்றும் தலைவாங்கிக் குரங்கு A—1. படங்கள் தூள்! தூள்! இருந்தாலும் அத்தியாயம் 5-ல் குரங்கு மாடுகளைப் பிடிக்கும் போலா கருவி வைத்திருக்கிறது. உடனே அது கத்தியான விநோதம் ஏனோ? அத்தியாயம் 9-ல் வில்லர் முகமூடியை துளைத்து விடுகிறார். முகமூடி துளை இல்லாமல் இருப்பது ஏனோ?

[தவறுகளைச் சுட்டிக் காட்டியதற்கு மிக்க நன்றி! இனி இதுபோல் ஏற்படாது பார்த்துக் கொள்கிறோம்.

—ஆ-ர்]

● M. அருண்பிரசாத், M. செந்தில் குமார், M. ஆனந்த குமார், D. சம்பத் குமார், கோவை-47.

துப்பறியும் வீரர் ஜேஸன் திடீரென வந்து வியப்பில் ஆழ்த்தி விட்டார். பாராசூட் பயிற்சியில் குதித்து குறிப்பிட்ட இடத்தில் இறங்கி காட்டுவது மயிர்க் கூச்செறியும் சாதனை! பாராசூட் விரியாமல் விண்ணில் தலைகீழாக வரும்போது எங்கள் மூச்சே நின்று விட்டது

● R. நாகராசன், கிருஷ்ணபுரம்.

தேன்தீவு மர்மம் படித்து முடித்து புத்தகத்தை மூடினால் போதும்! ஐயோ, அம்மா உண்மையாகவே ஒரு தேன்!

● ச. கோகுலகிருஷ்ணன், புதுக்கோட்டை-2.

மயிர்க் கூச்செறிய வைக்கும் சித்திரங்களுடனும், ஜேஸனின் டக்கர் சாகஸத்துடனும் வெளியான இஸ்தான்புல் நாடகம் என் மனதைக் கவர்ந்தது.

● S. J. சிவசங்கர், ஆரணி.

இஸ்தான்புல் நாடகமும், தேன்தீவு மர்மம் ஆகிய இரண்டு கதைகளிலும் இடம்பெற்று சாகஸம் புரிந்த ஜேஸனுக்கு என் பாராட்டுக்கள்!




மீண்டும் வருகிறார்கள்...
C.I.D. லாரன்ஸ் + ஜூடோ டேவிட்,
உங்கள் அபிமான சாகஸ ஜோடி
இவர்களை எதிர்த்து நிற்பதோ பரம வைரியான கிங் கோப்ரா!
லயன் காமிக்ஸ்
புதிய சாகஸம்!



இரும்பு மனிதன்
ஆர்ச்சிக்கு
புதியதொரு தலைவலி!
அதுதான் "மினி-ஆர்ச்சி"
என்னுமொரு அதிகப்பிரசங்கி
இரும்பு மனிதன்!
யார் அந்த
மினி-ஆர்ச்சி?
லயன்
காமிக்ஸ்
விலை ரூ. 2/-



மிஸ்டர். மர்மம்
ஸ்பைடர்
சாகஸம்!
விரைவில் வருகிறது!

# திகில்!





மயிர்க் கூச்செறிய
வைக்கும் "திகில்"
காமிக்ஸின் முதல்
இதழில் நான்கு பயங்
கரச் சித்திரக் கதை-
கள் இடம் பெறுகின்-
றன. முதலாவது இதழ்
86 ஜனவரி 15 முதல்
கிடைக்கும். படிக்கத்
தவறாதீர்கள்!

50 பக்கங்கள்

டெபாசிட் செலுத்தக்கூடிய
ஏஜண்டுகள் கீழ்க்கண்ட
முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண்: 374
சிவகாசி - 626 123.


பேய் வீரர்
ரிசக்ஸ்டன்
பிளேக்!


திகில்!

# சூப்பர் நிருபர் ஜானி!



ஜானி ஒரு சர்வதேச தினசரிப் பத்திரிக்கையின் ஸ்பெஷல் ரிப்போர்ட்டர்!

சர்வதேச அரங்கில் நடைபெறும் விசித்திரக் கொலைகள் – விளக்கமில்லா மர்மங்கள் – புதிரூட்டும் சம்பவங்கள் – போன்றவற்றின் பின்னணியினை ஆராய்வதே இவரது பணி!

செய்தி சேகரிப்பதோடு மட்டும் நிற்காமல், மர்மத்தின் மையத்தினுள் முழு மூச்சாக இவர் நுழைந்து விடுவதுண்டு!

விளைவு?

## திகில்!

இவரது திறமையினை "திகில்" காமிக்ஸ் உங்களுக்கு விரைவில் சித்தரித்துக் காட்டப் போகிறது!


இரகசிய ஏஜெண்ட்
ஜெஸ் லாங்!
அமெரிக்க உளவு
ஸ்தாபனமான FBI ன் விசேஷ
ஏஜெண்ட்! அமெரிக்காவின்
குற்ற உலகுடன் மட்டுமல் -
லாமல், சர்வதேச குற்றவாளி
களுடன் இவர் நடத்தும் போ
ராட்டம் பயங்கரத்தின் உச்ச
கட்டம்! "திகில்"காமிக்ஸின்
டாப் ஹீரோக்களில் இவரும்
ஒருவர்!
திகில்!




XIII (13) என்ற முத்திரை மட்டுமே அடையாளமாய் கொண்டிருந்த—தொரு மனிதனை கடலி-லிருந்து காப்பாற்றி வந்தனர் ஒரு கிழத் தம்பதி! அந்த மர்மமனிதனுக்கோ தன் பெயர்கூட நினைவில்லை! ஆழமானதொரு அதிர்ச்சியில் அவனது நினைவு போய்விட்டது!

அமைதியாய்கிழத்தம்பதியுடன் புது வாழ்க்கை நடத்தி வந்த அவனுக்கு ஒருநாள் மீண்டும் பயங்கர அதிர்ச்சி ஏற்பட்டது! கிழத் தம்பதியரை மூர்க்கத்தனமாய் எவனோ கொலை செய்திருந்தான்!

வெறி பிடித்த வேங்கை போல் பழி வாங்கக் கிளம்பிய அந்த மனிதனின் சாகஸக் கதையினை அற்புதச்சித்திரங்களுடன் உங்களுக்கு வழங்கப் போகிறது—

"திகில் காமிக்ஸ்"

துப்பறிவாளர் ப்ருனோ பிரேசில் ஒரு உல்லாசப் பிரியர்! ஆனால் அநீதிகளை எதிர்ப்பதில் இவர் ஒரு சீறும் வேங்கை! உலகம் சுற்றும் இந்த துப்பறிவாளரின் சர்வதேச சாகஸங்கள் வாசகர்களை ஒரு புது உலகிற்கு இட்டுச் செல்லும்!

**"லயன் காமிக்ஸ்" க்கு இவர் மற்றும் ஒரு அற்புத அறிமுகம்!**



# சாகஸ வீரர் ரோஜர்

லயன் காமிக்ஸ்



**ரோஜர் ஒரு**

துடிதுடிப்பான இளைஞர். ஏனோ இவருக்கு விசித்திரமானதொரு ராசி!

இவர் செல்லுமிடமெல்லாம் இவரைத் தேடிவருவது அபாயமும், தொல்லையும் தான்!

வீண் சண்டைக்குப்போக மாட்டேன்! ஆனால் வந்ததை விடமாட்டேன்! என்னும் மனப்பான்மை கொண்ட ரோஜர், நேரடி மோதலுக்கு இறங்கி விடுவார்!

துடிதுடிப்பான இவரது சாகஸங்கள் **லயன் காமிக்ஸ்** வாசகர்களுக்கு ஒரு விருந்தாக அமையப் போகிறது!



விசித்திர நால்வர்!
''எதையும் செய்து முடிப்போம்'' என்பதே இந்த விசித்திர நால்வரின் இலட்சியம்! இவர்களது காமெடி சாகஸங்கள் உங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்
லயன் காமிக்ஸ்


ஸ்பைடர் நல்லவனாக மாறினான்!
குற்றவியலுக்கு முழுக்கு!
லயன் காமிக்ஸ்
இது உண்மையா?
விடை: லயன் காமிக்ஸில் விரைவில்!
111



பொங்கல் பரிசு!
1986 ஜனவரி 15 முதல்
வெளிவருகிறது
திகில் காமிக்ஸ்!
திகில்!
ரூ. 3.00.
ஏஜெண்டுகள் விண்ணப்பிக்கவும்!